**நோர்த் சீ லிமிட்டட் - 2022/2023**

-----------------------------------------------

வரையறுத்த நோர்த் சீ லிமிட்டட்யின் 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின்பொறுப்பு**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்யையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் மற்றும் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்ட செயற்பாட்டுக் கையேட்டின் பந்தி இலக்கம் 6.6 இற்கு இணங்க கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டிய போதிலும் 2022 மார்ச் 31 ஆந் திகதியில் முமற்றும் 2023 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கை 2024 ஆகஸ்ட் 25 ஆந் திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உள்ளமை**

கம்பனியால் கடைசியாக தயாரித்த 2021 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்ப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவுகள் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

| | **21/2020** | **20/2019** |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| நடைமுறையற்ற சொத்துக்கள் | 250,938,389 | 284,221,302 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 89,194,058 | 82,457,994 |
| முழுச்சொத்துக்கள் | 340,132,447 | 366,679,296 |
| உரிமை மூலதனம் | (259,756,536) | (176,321,640) |
| நடைமுறையற்ற பொறுப்புக்கள் | 482,478,567 | 469,688,332 |

| | | |
|---|---|---|
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 117,410,416 | 73,312,603 |
| முழு உரிமை மூலதனங்கள் மற்றும் பொறுப்புக்கள் | 340,132,447 | 366,679,295 |
| வருமானங்கள் | 269,066,886 | 258,829,633 |
| செலவுகள் | 358,345,758 | 376,990,294 |
| வரிக்கு பின்னைய இலாபம்/ (நட்டம்) | (89,278,872) | (118,160,661) |

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் 15 ஆம் பிரிவு | இந்த அதிகாரச் சட்டம் தொடர்புபடுகின்ற அனைத்து தொழில் தருனர்களாலும் ஒவ்வொரு ஊழியருக்காகவும் ஊழியரின் பங்களிப்பு மற்றும் தொழில் தருனரின் பங்களிப்பினை கணிப்பிட்டு அடுத்துவரும் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் நிதியத்திற்கு செலுத்த வேண்டிய போதிலும் 2020 யூலை மாதத்திலிருந்து 2023 மார்ச் 31 ஆந் திகதி வரை மொத்தமாக ரூபா 51,451,021 தொகையான பங்களிப்பு பணம்<br><br>கணக்காய்வுத் திகதியான 2024 மார்ச் 31 ஆந் திகதி வரை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 மார்ச் 31 ஆந் திகதி வரை செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு பணத்தின் நிலுவை மீதியான ரூபா 51,471,021 தொகையில் இன்றுவரை செலுத்தியுள்ள பணம் ரூபா 1,059,167.81 ஆகும். அதற்கிணங்க மிகுதியாக செலுத்த வேண்டியுள்ள பணம் ரூபா 50,411,854 ஆகும். விரைவில் தொழிற்சாலைக்குரிய நிலுவைப் பணத்திற்காக கௌரவ நீதி<br><br>மன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள பணிப்புரையின் பிரகாரம் செலுத்துதலானது தவணை ரீதியாக இடம்பெறும். | ஊழியரின் உழைப்பிலிருந்து சேமலாப நிதிய பங்களிப்பு பணத்தை கழித்து மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் நிதியத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். |
| (ஆ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டத்தின் | இந்த அதிகாரச் சட்டம் தொடர்புபடுகின்ற அனைத்து தொழில் தருனர்களாலும் ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்தியுள்ள ஒவ்வொரு மாதத்திலும் அந்த ஊழியர் சம்பந்தமாக ஊழியர் | எதிர்காலத்தில் செலுத்த வேண்டியுள்ள பணம் ரூபா 3,674,194 ஆகும். அதனை 12 தவணைப் பணங்களில் செலுத்தி | ஒவ்வொரு ஊழியர் தொடர்பாக ஊழியர் நம்பிக்கைப் |

| | | | | |
|---|---|---|---|---|
| | 16(1) ஆம் பிரிவு | உழைக்கின்ற முழு உழைப்புக்களில் மூன்று சதவீதத்திற்குச் சமமான தொகை பங்களிப்பு பணமாக அடுத்துவரும் மாதத்தின் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு அனுப்பிவைப்பதற்கு கட்டுப்பட்டுள்ளார். எவ்வாறாயினும் கம்பனியால் அதற்கு இணக்கமற்ற வகையில் 2021 செப்தெம்பர் மாதத்திலிருந்து 2023 மார்ச் மாதம் வரையான காலம் தொடர்பாக ரூபா 4,139,226 பங்களிப்புகு பணத்தை கணக்காய்வு திகதியான 2024 மார்ச் 31 ஆந் திகதி வரை நிதியத்திற்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முடிவுறுத்துவதற்காக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துடன் ஒரு இணக்கப்பாட்டிற்கு வரப்பட்டுள்ளது. | பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்பு பணத்தை கழித்து அடுத்துவரும் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் நிதியத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். |
| (இ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 18(4) ஆம் பிரிவு | 30 நாட்களுக்குள் கணக்காய்வுக் கட்டணம் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் இக்கம்பனியால் 2015/16 கணக்காண்டிலிருந்து 2020/21 கணக்காண்டு வரையான காலம் தொடர்பாக ரூபா 1,979,100 தொகையான கணக்காய்வுக் கட்டணம் கணக்காய்வுத் திகதியான 2024 மார்ச் 31 ஆந் திகதி வரையும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது செலுத்த வேண்டியவையாக காணப்படுகின்ற கணக்காய்வுக் கட்டணமாகிய ரூபா 1,979,100 தொகை இன்று வரை செலுத்தப்படவில்லை என தெரிவிக்கிறேன். அத்தொகையானது நிறுவனத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் பிரகாரம் கொடுப்பனவு செய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் ஆயத்தப்படுத்துகின்றது என தெரிவிக்கிறேன். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 18(4) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வுக் கட்டணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 50(1) ஆம் பிரிவு | கம்பனியால் பங்குகளை வழங்கும் போது கூட்டிணைப்பதற்கான விண்ணப்பப் பத்திரத்தில் பெயரிடப்பட்டுள்ள அனைத்து பங்குடமையாளர்களுக்கும் அதன் 05 ஆம் பிரிவின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட உடன் அந்த நபருக்கு தகமையுள்ள பங்குச் சான்றிதழினை வழங்க வேண்டிய போதிலும் கம்பனி 2001 ஆம் ஆண்டின் போது கூட்டிணைக்கப்பட்டு 2007 கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் மீண்டும் பதிவுசெய்து பங்குகள் | இன்றுவரை பங்குச் சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை. | பங்குடமையாளர்களுக்கு பங்குச் சான்றிதழ்கள் வழங்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வழங்கப்பட்டிருந்தும் உரிய பங்குடமையாளர்களுக்கு கணக்காய்வுத் திகதியான 2024 மார்ச் 24 ஆந் திகதி வரை பங்குச் சான்றிதழ்களை வழங்கியிருக்கவில்லை. | | |
| (உ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டம் | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 144,271,952 தொகையான பெறுமதி சேர் வரிப் பண மீதி கணக்காய்வுத் திகதியான 2024 மார்ச் 27 ஆந் திகதி வரையும் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பிவைப்பதற்கு கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 144,271,952 ஆன பெறுமதி சேர் வரிப் பணத்திற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் தற்பொழுது நிறுவனத்தில் உள்ள வருமானத்தின் பிரகாரம் ஒரு மாதத்திற்கு ரூபா 100,000 பணம் வீதம் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது என தெரிவிக்கிறேன். | பெறுமதி சேர் வரிப்பண மீதி உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தை கட்டியெழுப்புதல் வரி அதிகாரச் சட்டம் | கம்பனியால் 2023 ஆம் ஆண்டு இறுதி வரை தேசத்தை கட்டியெழுப்புதல் வரிப் பணமும் அது தொடர்பான தண்டப் பணமும் சேர்த்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 20,455,629 மீதியை கணக்காய்வுத் திகதியான 2024 மார்ச் 24 ஆந் திகதி வரை அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையுள்ள தேசத்தை கட்டியெழுப்புதல் வரித் தொகையான ரூபா 20,455,629 தொகையில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட தொகையான ரூபா 12,838,881 தொகை நீதி மன்றத்திற்கு செலுத்தப்பட்டது. | தேசத்தை கட்டியெழுப்புதல் வரித் தொகையும் அதனுடன் தொடர்புபட்ட தண்டப் பணத்தையும் சேர்த்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | தேசிய பெறுகை முகவராண்மையின் 2006 மார்ச் 01 ஆந் திகதிய 09 ஆம் இலக்க சுற்றறிக்கை | பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்யும் போது 2006 ஆம் ஆண்டின் பொருட்கள் மற்றும் வேலைகளுக்கான பெறுகை வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டிகள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட கையேட்டில் குறிப்பிட்டவாறு உச்ச அளவு | 2022/2023 ஆம் ஆண்டிற்காக பெறுகை நடைமுறை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய பெறுகை முகவராண்மையின் 2006 மார்ச் 01 ஆந் திகதிய 09 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| பொருளாதார நலன்களை வழங்குதல், நிர்ணயிக்கப்பட்ட நியம தரங்களுக்கு பொருள் விபரக் குறிப்புக்களுக்கு மற்றும் சட்ட விதிகளுக்கு இணங்க வெளிப்படைத்தன்மையுடன் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் அவற்றினை பின்பற்றாது 2022/2023 ஆம் ஆண்டின் போது ரூபா 17,595,099 தொகை மூலப்பொருட்கள் கம்பனியால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பீஈடி 12 ஆம் இலக்க மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய நல்லாட்சி தொடர்பான அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பிரிவு மற்றும் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்க தொழில் முயற்சிகள் தொடர்பான நல்லாட்சிக்கான வழிகாட்டிகளின் பிரகாரம் கம்பனியால் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கிணங்க உத்தேச இலக்குகளை அடைந்துகொள்வதற்கு முடியுமான வகையில் தொழில் முயற்சியினை செயற்படுத்துவதற்கு நிதி ஆண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தினை பணிப்பாளர் சபை அங்கீகரித்ததன் பின்னர் வரிசை அமைச்சு, அரசாங்க தொழில் முயற்சிகள் தொடர்பான திணைக்களம், பொதுத்துறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஆகியோருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2022/23 ஆம் ஆண்டினை உள்ளடக்கும் வகையில் தொழில் முயற்சித் திட்டம் கணக்காய்வுத் திகதியான 2024 மார்ச் 27 ஆந் திகதி வரை கணக்காய்விற்குச சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இக்காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்ட தொழீல் முயற்சித் திட்டம் நிறுவன ஆவணங்களில் இல்லை என தெரிவிக்கிறேன். | பீஈடி 12 ஆம் இலக்க மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய நல்லாட்சி தொடர்பான அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பிரிவு மற்றும் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் தொடர்பான நல்லாட்சிக்கான வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் கம்பனியால் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு அது வரிசை அமைச்சு, அரசாங்க தொழில் முயற்சிகள் தொடர்பான திணைக்களம் பொதுத்திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஆ) | 01/2014 ஆம் இலக்க மற்றும் 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 05(02) ஆம் பந்தி மற்றும் பீஈடி 12 ஆம் இலக்க மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய அரசாங்க தொழில முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பிரிவின் பிரகாரம் அடுத்துவரும் நிதி ஆண்டின் போது நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்த்த வணிக செயற்பாடுகளை உள்ளடக்கிய செயல் | இக்காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் நிறுவனத்தின் ஆவணங்களில் இல்லை எனத் தெரிவிக்கிறேன். | 01/2014 ஆம் இலக்க மற்றும் 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 05(02) ஆம் பந்தி மற்றும் பீஈடி 12 ஆம் இலக்க மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் 2022/23 நிதி ஆண்டிற்காக ஒரு செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | பிரிவின் பிரகாரம் அடுத்துவரும் நிதி ஆண்டின் போது நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட வணிக செயற்பாடுகளை உள்ளடக்கிய செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1(ஆ) பந்தியின் பிரகாரம் கம்பனியால் ஆகக் குறைந்தது மூன்று ஆண்டுகள் காலத்திற்காக பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அடுத்துவரும் ஆண்டிற்கான பெறுகை நடவடிக்கைகள் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை உள்ளடக்கி ஆறு மாதங்களுக்கு மேற்படாத காலத்தின் போது நாளாந்தம் நாளதுவரையாக்கிய ஒரு பெறுகைத்திட்டம் கம்பனியால் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் 2022/23 நிதி ஆண்டிற்காக அவ்வாறான ஒரு பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022/2023 ஆம் ஆண்டிற்காகக ஒரு பெறுகைத் திட்டம் தயாரிககப்படவில்லை. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் ஆகக் குறைந்தது மூன்று ஆண்டுகள் காலத்திற்கான பிரதான பெறுகைத் திட்டமும் அதன் பின்னர் வருகின்ற ஆண்டிற்கான பெறுகை நடவடிக்கைகளை உள்ளடக்கிய ஆறு மாதங்களுக்கு மேற்படாத காலத்தின் போது நாளாந்தம் நாளதுவரையாக்கப்பட்ட பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கம்பனியிடம் காணப்பட்ட ரூபா 2,833,333 தொகையான காணிகள், ரூபா 16,655,380 தொகையான கட்டிடங்கள் மற்றும் ரூபா 446,270,210 தொகையான ஏனைய சொத்துக்கள் மூன்று ஆண்டுகளுக்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை மீள்மதிப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் கம்பனியின் அச்சொத்துக்களை மீள்மதிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்திடம் உள்ள காணிகள் மற்றும் கட்டிடங்களுக்காக காட்டப்படுகின்ற பெறுமதி 10 ஆண்டுகளுக்கு முன்னர் ஏடுகளில் குறிப்பிடப்பட்ட பெறுமதி என உங்களுக்கு தெரிவிக்கிறேன். அச்சொத்துக்கள் மீள்மதிப்புச் செய்யப்பட்டிருக்கிவல்லை. எதிர்காலத்தில் அச்சொத்துக்களை மீள்மதிப்புச் செய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் ஆயத்தப்படுத்தப்படுகின்றது எனத் தெரிவிக்கிறேன். | கம்பனியில் காணப்படுகின்ற சொத்துக்கள் மூன்று ஆண்டுகளுக்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை மீள்மதிப்புச் செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2020/21 நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தொடர்ச்சியாக தீர்த்துவைக்கப்படாது காணப்படுகின்ற பெறவேண்டிய மீதி ரூபா 21,474,469 தொகை மற்றும் செலுத்த வேண்டிய மீதியான ரூபா 247,197,644 இனை தீர்த்துவைப்பதற்கு கணக்காய்வுத் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020/2021 நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் காட்டப்பட்டுள்ள பெறவேண்டிய மீதிகள் மற்றும் செலுத்த வேண்டியதாக காட்டப்பட்டுள்ள மீதிகள் சரியானவை எனவும் அம்மீதிகள் தொடர்பான விபரம் எங்கள் நிறுவனத்திடம் காணப்படுகின்ற மூன்று தொழிற்சாலைகளான லுனுவில, வீரவில யாழ்ப்பாணம் ஆகிய நிறுவனங்களில் அத்தகவல்கள் உள்ளன எனவும் தெரிவிக்கிறேன். | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தொடர்ச்சியாக முன்கொணடு வரப்படுகின்ற பெறவேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்கும் செலுத்த வேண்டிய மீதிகளை தீத்துவைப்பதற்கும் செலுத்த வேண்டிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| ஆளணியினரைச் சேர்த்துக்கொள்வதற்காக அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு 2022 மார்ச் 11 மற்றும் 2022 மார்ச் 25 ஆந் திகதிகளில் கம்பனியின் தலைவரினால் முகாமைத்துவ சேவைகள் திணைக்கத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் அதற்கு பதிலாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் 2022-05-18 ஆந் திகதிய கடிதத்தினைச் சமர்ப்பித்து 04 விடயங்கள் தொடர்பாக விபரமான அறிக்கையினை வேண்டி இருந்தார். எனினும் அக்கடிதத்திற்குரிய தகவல்கள் கம்பனியால் சரியாக கணக்காய்வுத் திகதி வரை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க ஆளணியினரை அங்கீகரித்து கொள்வது மிகவும் அத்தியவசியமான நடவடிக்கையாக காணப்பட்டிருந்தும் அதற்கு தேவையான தகவல்கள் கம்பனியால் தாமதப்படுத்தப்பட்டிருந்ததன் காரணமாக ஆளணியினரை அங்கீகரித்துக் கொள்ளும் நடைமுறை இன்னும் தாமதமடைந்திருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | பதவியினை அங்கீகரித்துக்கொள்வதற்கு வேண்டப்படுகின்ற தகவல்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| PED 12 ஆம் இலக்க மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் நல்லாட்சிக்கான வழிகாட்டிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தி மற்றும் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கைக்கு இணங்க ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அதாவது காலாண்டிற்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தினை நடாத்தி பணிப்பாளர் சபைக்கு தேவையான நடவடிக்கைகள் தொடர்பாக தெரியப்படுத்தப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் 2022/2023 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டம் நடாத்தப்படவில்லை. | ஒவ்வொரு காலாண்டிற்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் அப்போது நிறுவனத்தை நடாத்திச் சென்ற முகாமைத்துவம் மற்றும் தலைவரை உள்ளடக்கிய பணிப்பாளர் சபை அந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை எனத் தோன்றுகின்றது. | PED 12 ஆம் இலக்க மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் நல்லாட்சிக்கான வழிகாட்டல்கள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தி மற்றும் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 1/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்படுதல் வேண்டும். |

**4.2 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| PED 12 ஆம் இலக்க மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.2 ஆம் பந்தி மற்றும் 1/2021 ஆம் இலக்க மற்றும் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பணிப்பாளர் சபையினால் ஒரு மாதத்திற்கு ஒரு தடவையாக ஆண்டின் போது 12 தடவைகள் கூட்டப்பட வேண்டியதுடன் கம்பனியின் செயலாற்றல் தொடர்பான வழிகாட்டல்கள் செயற்பாடுகளின் மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2022./23 நிதி ஆண்டு தொடர்பாக ஏப்ரல் மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் 02 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. மேலும் 2023 ஆம் ஆண்டின் யூலை மாதத்தின் பின்னர் கணக்காய்வுத் திகதி வரை (2024 ஆகஸ்ட் 26) பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்படவில்லை. | பணிப்பாளர் சபையின் திறைசேரி பிரதிநிதி 2023-09-18 ஆந் திகதி பணிப்பாளர் சபையிடமிருந்து நீங்கியுள்ளமையும் இன்னுமொரு பணிப்பாளர் பதவியிலிருந்து நீங்கியுள்ளமையும் மற்றும் இன்னும் இரண்டு பணிப்பார்கள் நிர்ணயிக்கப்பட்டவாறு பணிப்பாளர் சபைக் கூட்டங்களுக்காக பங்குபற்றியிருக்காமையினாலும் உரிய முறைப்படி பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்த முடியாதிருந்தது. | PED 12 ஆம் இலக்க மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.2 ஆம் பந்தி மற்றும் 1/2021 ஆம் இலக்க மற்றும் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்படுதல் வேண்டும். |